தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௨௰௨	மலர்
௪௪	சாதாரண, தை	௰
	(1971 — சனவரி — பிப்ரவரி)	

தொகையிலக்கணம்

[செஞ்சொற் கொண்டல்

திரு. புலவர். செ. சிங்காரவேலன் எம். ஏ., டிப். லிங்.

அ. வ அ. கல்லூரி, மாயூரம்]

கருத்துவேறுபாடுகள் :— நன்னூலில், உயிரீற்றுப்புணரியலின் இரண்டாம் நூற்பாப் பின்வருமாறு உள்ளது :

"வேற்றுமை ஐம்முதல் ஆறும் அல்வழி
தொழில் பண்புவமை உம்மை யன்மொழி
எழுவாய் விளியீரெச்சமுற் றிடையுரி
தழுவு தொடரடுக்கென வீரேழே"

இதற்கமைந்த உரைப்பகுதி பின்வரும் சொற்றொடர்களோடு முடிகின்றது : "வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித் தொகை யென்னும் அல்வழிப் புணர்ச்சியவாய தொகைநிலைத் தொடர்மொழிகளை ஒரு மொழிகளென்பாருமுளர் ; அவர் கூற்றுத் தாய்மலடி யென்றாற் போலும்." இந்த உரையினால், இதனை எழுதிய சங்கர நமச்சிவாயர் ஆகிய உரையாசிரியர்க்குத் தொகைகள் எல்லாம் ஒரு மொழிகளே என்ற கருத்து உடன்பாடு அன்று என்பது புலனாகும். இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் இங்குக் குறித்த தொகைகளை ஒரு மொழிகள் என்று கொள்ளுதல், தொல்காப்பிய எழுத்ததிகாரப் புணரியல் எட்டாம் நூற்பா உரையான் அறியப்படுகின்றது. இலக்கண விளக்க ஆசிரியர்க்கும் தொகைகள் ஒரு மொழிகளே என்ற கருத்தே உடன்பாடு என்பது அந்நூலின் 334-ம் நூற்பா உரையால் அறியப்பெறும். இங்குக் காட்டப் பெற்ற கருத்து வேற்றுமைகளைச் சிந்தித்து முடிவுகாண முயலல் நற்சிந்தனையே ஆகும்.

நச்சினார்க்கினியரும் தொகையும்:— நச்சினார்க்கினியர், நிலைமொழி அடையடுத்தும், வருமொழி அடையடுத்தும், அவ்விருமொழியும் அடையடுத்தும் புணரும் என்று எழுதியதன்பேரிற் சிறப்புவிதி கூறுவதாகக் கொண்ட புணரியல் நூற்பா பின்வருமாறு;

" நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக்குரிய.,

நிலைமொழியாக நிறுத்தின சொல்லும், அதனைக்குறித்து வருஞ் சொல்லும் தாமே புணராது ஓரோ வோர் சொல் அடையடுத்து வரினும் இரண்டும் அடையடுத்து வரினும் புணர்நிலைமைக்கு உரிய 'என்பது அவர்உரை. இதற்கு அவர் காட்டும்' எடுத்துக் காட்டுகள் இவை:

பதினாயிரத்தொன்று, ஆயிரத்தொருபஃது
பதினாயிரத் திருபஃது.

இவற்றைப்பின்வருமாறு தெளிவுபடுத்தலாம்.

அடை	நிறுத்தசொல்	அடை	குறித்து வரு கிளவி
பதின்	ஆயிரம்	—	ஒன்று
—	ஆயிரம்	ஒரு	பஃது
பதின்	ஆயிரம்	இரு	பஃது

நிறுத்த சொல்லும் குறித்து வருகிளவியும் அடையடுத்தும் புணர்தற்குரியன என்பதும். அவ்வாறு புணருங்கால் இடையே சாரியைகள் வருதலும் உண்டென்பது இதனால் விளங்கத்தக்கது ஆகும்.

"இவ்வடைகள் ஒருசொல்லேயாம். வேற்றுமைத் தொகையும் உவமத் தொகையும் முடியப் பண்புத்தொகையும் வினைத்தொகையும் பிளந்து முடியாமையின் ஒருசொல்லேயாம். அன் மொழித்தொகையும் தனக்கு வேறோர் முடிபின்மையின் ஒரு சொல்லே யாம். இத்தொகைச் சொற்களெல்லாம் அடையாய் வருங்காலத்து ஒருசொல்லாய் வருமென்று உணர்க. உண்டசாத்தன் வந்தான், உண்டு வந்தான் சாத்தான் என்பனவும் ஒருசொல்லேயாம்".

என்பது நச்சினார்க்கினியரின் விளக்கம். இதற்கு அடிப்படையாக, இவ்விளக்கத்தின் தொடக்கத்திலேயே, எடுத்துகாட்டுகளுக்கு முன்பாகவே. "அடையாவன உம்மைத் தொகையும் இரு பெயரொட்டுப் பண்புத்தொகையுமாம்" என்றெழுதியுள்ளார் இவ்வுரைகாரர்.

வேற்றுமைத்தொகையும் உவமத்தொகையும் இரு சொல்லாய்ப் பிளந்து முடிகின்ற தன்மையை உடையுன.

கை + விரல் < கைவிரல்
தாமரை + கண் < தாமரைக்கண்

என்ற இவ்வெடுத்துக் காட்டுகளில். கைவிரல் என்ற வேற்றுமைத்தொகை இரு சொல்லாய்ப் பிரிந்து முடியும் தன்மையும், தாமரைக்கண் என்ற உவமத்தொகை இருசொல்லாய்ப்பிரிந்து முடியும் தன்மையும் உடையன. ஆதலின். இவை (வேற்றுமைத் தொகை, உவமத்தொகை) இரண்டும் இருசொற்கள் என்று கருதுகின்ருர் நச்சினார்க்கினியர்.

செந்தாமரை என்ற பண்புத்தொகையோ, அன்றிக் கொல் களிறு என்ற வினைத்தொகையோ தெளிவாகப்பிரிந்து இரு சொற்களாக நிற்றல் இயலாமையின், அவை ஒரு சொல்லாற் தன்மைப் பட்டு நிற்பன என்னும் கருத்தில் ஒருசொல்லே என்று கருதுகின்ருர் அவர் என்று கொள்ளலாம்.

அன்மொழித்தொகை என்றும் வெளிப்படாத சொல்லாகவும். ஏனைத்தொகைகளின் ஈற்றில் தோன்றுவதாகவும், ஒருசொற்றன்மைப் பட்டதாகவும் உள்ளமையால் ஒரு சொல்லாகலாம் என்று நச்சினார்க்கினியர் கருதுவது, 'தனக்கு வேருேர் முடிபு இன்மையின்' என்றசொற்ருெடராற் புலனுகின்றது. இறுதியாகத் தொகைச்சொற்கள் அடையாய் வருங்காலத்தேயே ஒருசொல் லாய்வரும் என்று முடிக்கின்ருர் அவர். அவர் கருத்துப்படி, உண்ட சாத்தனுய் வந்தான், உண்டுவந்தவனுகிய சாத்தன் என்று ஒருசொற்றன்மைப்படும்போது அவை ஒருசொல் என்று கொள்ளப்பட வேண்டும் என்று துணியலாம்.

சங்கரநமச்சிவாயரும் தொகையும்:— இனி. சங்கரநமச்சிவாயர் நன்னூல் உரையில், வினைத்தொகை, பண்புத்தொகை, அன்மொழித்தொகை யென்பன அல்வழிப் புணர்ச்சியைச் சார்ந்த தொகை நிலைத் தொடர் மொழிகள் ஆக இருத்தலின் இவற்றை ஒரு

மொழிகளாகக் கொள்ளலாகாது என்னும் கருத்துடன் எழுது தலைக் காண்கின்றோம். **தொகை** என்றாலேயே இரு சொல்லின் தொகுத்தல் புலப்படுகின்றது; அன்றியும் **தொடர் மொழி** என்பதும் ஒரு மொழியன்று என்பதை விளக்குகின்றது. தாய் என்று சொன்னாலேயே பிள்ளை பெற்றமையைக் குறிக்குமாதலின், அதன் பின் 'மலடி' என்றுரைப்பது நகையையே தோற்றுவிக்கும்; அதுபோல் தொகை என்று சொன்னாலேயே இருமொழியைக் குறிக்குமாதலின், அதன்பின் 'ஒரு மொழி' என்றுரைப்பது நகையையே தோற்றுவிக்கும் என்பது இப்பெரும்புலவர் கருத்து.

இந்தத் தொகை நிலைத் தொடர்கள் இருமொழிகளே என்பதும், ஆயினும் உருபு தொகுதலின் சொல்லால் பிளவுபடாதும் பொருளால் பிளவுபட்டும் இவ்வாறு வரும் என்பதும் சங்கர நமச்சிவாயர் சொல்லதிகாரப் பொதுவியல் — பத்தொன்பதாம் நூற்பாவில் எழுதுவதால் புலன் ஆகும் உண்மைகள்.

சேனாவரையரும் தொகையும் :— சேனாவரையரும், தொகையிலக் கணம் குறித்துத் தம் கருத்தைத் தெளிவுற எழுதுகின்றனர். தொகை என்றற்குரிய காரணங்கள் இரண்டினைச் சேனாவரையர் தெளிவுபடுத்துகின்றனர்; (1) வேற்றுமை உருபு முதலியன இடையில் மறைந்து நிற்ப, இரண்டும் பலவுமாகிய சொற்கள் சேர்ந்து நிற்பது தொகை. (2) வேற்றுமைப் பொருள் முதலிய பொருள்களில் இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஓரோசையாக இயைந்து நிற்பது தொகை.

உருபு மறைந்து நிற்பன தொகை என்ற கருத்து ஏற்கப் பட்டால் செய்தான் பொருள் என்பன போன்றனவும் தொகை என்று கூறப்பட வேண்டியிருக்கும். வேழக் கரும்பு, கேழற்பன்றி முதலிய தொகைகளிலே உருபு இன்மையின் இவை தொகை அல்ல என்று மறுத்துக் கூறவேண்டியிருக்கும். வேற்றுமைப் பொருள் முதலிய பொருள்களில் இரண்டு முதலியன ஒட்டி ஒரு சொல்லாக இணைவதே தொகை என்ற கருத்து ஏற்கப்பட்டால், செய்தான் பொருள் என்பன முதலியவற்றைத் தொகையாகா என்று விலக்க வேண்டியிருக்கும். ஆதலால், '**ஒட்டி ஒரு சொல்லாக இசைத்தல் தொகையிலக்கணம்**' என்று கூறுவதே தொல்காப்பியர் கருத்துக்குப் பொருத்தமானதாகும் என்பது சேனாவரையர் கருத்து, 'நின்ற சொல் மறைதல்' என்ற பொருளிலேயே '**தொகுதல்**' என்பதனைத் தொல்காப்பியர் ஆண்டிருக்கவேண்டும் என்றும் சேனாவரையர் கருதுகின்றார். தொல்காப்பியச் சொல்

லதிகாரத்து, 412-ம் நூற்பா உரையில் இவ்வாறு சேனாவரையர் எழுதுவதால், தொகைகள் இரு மொழிகளே என்பதும், அவை ஒட்டி ஒரு சொன்னீர்மைப்பட்டு வருவன என்பதும் அவரது கருத்துக்களாதல் இனிது புலப்படுவதாகும்.

தொகைகள் ஒரு சொல் நடையின:— இனி தொகைகள் பற்றிய இவ்வுரைகாரர்களின் கருத்துக்களை இனிது விளங்கிக் கொள்ளுவதற்குப் பின்வருந் தொல்காப்பியர் திருவாக்கும் பெருந்துணை புரிவதாகும்.

''எல்லாத் தொகையும் **ஒரு சொல் நடைய**'' (420) அறுவகைத் தொகைச் சொல்லும் ஒரு சொல்லாய் நடத்தலை உடைய என்பதே இங்குச் சுட்டப்பட்ட கருத்து. ஒரு சொல் நடைய எனப் பொதுப்படக் கூறியதனால் 'யானைக் கோடு' போல்வன பெயர்ச்சொல் நடைய 'நிலங்கடந்தான்' போல்வன வினைச் சொல் நடைய என்று சேனாவரையர் தெளிவுபடுத்தியுள்ள திறம் பாராட்டத்தக்கது. ஆதலால், உருபேற்றலும் பயனிலை கோடலும் பெயர்ச்சொல் நடையவாதற்கும், பெயர் கோடலும், பயனிலை ஆதலும் வினைச்சொல் நடையவாதற்கும் கூட்டித் தெளிவு படுத்தலாம்.

யானைக் கோட்டை, யானைக் கோட்டால் (உருபேற்றல்)
யானைக்கோடு வந்தது, யானைக் கோடு ஒடிந்தது
(பயனிலை கோடல்)
அவன் நிலங்கடந்தான் (பயனிலை ஆதல்)
நிலங்கடந்தான் சாத்தன் (பெயர் கோடல்)

முடிவு:— இங்கு எடுத்துக் காட்டப்பெற்ற இக்குறிப்புக்களால், தொகையிலக்கணம் பற்றிய பழந்தமிழ் இலக்கணப் புலவர்களின் கருத்து இன்னதெனத் தெளிவாகும். தொகைச் சொற்கள் ஒரு சொற்றன்மைப் பட்டு விளங்குவன என்பதும், அவற்றை இரு மொழிகள் ஒற்றுமைப் பட்டு ஓரோசையாக விளங்கும் தன்மை உடையன என்று கூறுவது பொருந்தும் என்பதும் நன்கு எண்ணித் தெளிதற்கேற்ற நலம் உடையவை. இந்த அடிப்படைத் துணிவுடன், இப்பழந்தமிழ்க் குறிப்புக்களை நோக்கினால் அவற்றின் ஆழ்பொருளை இனிது உணர்தற்கு வாய்ப்பாகும்.

திருக்குறட் கருவூலம்.

(நக்கீரன் வழியடிமை. வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்,
இராணிப்பேட்டை.)

க. திருக்குறள் — நூற்சிறப்பு.

திருக்குறள் தீந்தமிழின் மூலபண்டாரம்; தமிழ் நூல்களில் தலையாயது; சந்தத் தமிழிசை எந்தத் திசையினும் முந்தச் செயல்படும் மொய்ம்பினது; சிந்தைக்கினியது; செவிக்கினியது; வந்த இருவினைக்கு மாமருந்தும் ஆம். இதன் விழுப்பத்தை யோர்ந்தே,

"பல்காற் பழகினுந் தெரியா வுளவேல்
தொல்காப் பியந்திரு வள்ளுவர் கோவையார்
மூன்றினு முழங்கும்"

என முழங்கினர் இலக்கணக்கொத்துடையார்.

நூறு அடிகளின் மிக்குப் பயிலும் அகவற்பாக்களை ஆர்வத்தொடு யாத்தும், நூறு சீர்களின் மிக்குப்பயிலும் விருத்தப் பாக்களை விழைவொடு யாத்தும், கருதிய பொருளை முற்றுற மொழிந்தமையாத புலவர் பலருளராக, ஏழே சீர்கள் கொண்டியங்குங் குறட்பாக்களான் நூல் செய்து, அந்நூலின்கண் மக்கட் குறுதி பயக்கும் நாற்பொருளும் முடித்துக்காட்டி எம்மொழிப் புலவர்க்குந் தனிமுதற் புலவராந் தகைமை பெற்றுயர்ந்தனர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனர் என்றுணர்க. இது கருதியே

"எல்லாப் பொருளு மிதன்பா லுளவிதன்பால்
இல்லாத வெப்பொருளு மில்லையால் — சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனர்
சுரந்தபா வையத் துணை"

என்று மதுரைத் தமிழ் நாகனர் மகிழ்ந்தேத்தினர். இதன்கண் "சொல்லாற் பரந்த பாவால் என்பயன்" என்பது ஏனைய புலவன்மாரின் சிறுமையையும், "வள்ளுவனர் சுரந்தபா வையத் துணை என்பது வள்ளுவர் பெருமானின் பெருமையையும் சுட்டுவ. முப்பாலினருமை நன்கு தெளிந்தே உரையாசிரியர் காலிங்கர், ஆசிரியரை வள்ளுவக் கடவுள் என வழுத்திப் போந்தார்.

எந்நூற்கும் பாயிரச் செய்யுட்கள் ஓரிரண்டே உளவாக, இந் நூற்குத் "திருவள்ளுவமாலை" என்றோர் தனி நூலிருத்தலே இதன் மாண்புணர்த்தும் என்க. அன்றியும், இத்துணைச் சுருங்கிய வடிவானியன்ற பாவானும் நூலானும் மண்ணகத்துப் பொருளையும் விண்ணகத்துப் பொருளையும வீட்டகத்துப் பொருளையும் முற்றுறக்கிளந்த பெற்றிமை வேறு எந்நூற்கே னும் எம்மொழிக்கேனும் உண்டுகொல்? இன்றே.

இத்தகு பீடுசால் பெருநூலைப் பிழையறவுணர்ந்தோர் இந்நாளில் அருகி வருகின்றனர். அம்மட்டோ! திருக்குறளின் பெயரையும் வழுவிலாதுணரமாட்டாராயுமுளரே! என்னை? "வள்ளுவம்" எனவும், "திருவள்ளுவம்" எனவும் மனக் கியைந்தவாறெல்லாம் பேசியும் எழுதியும் சில ஆசிரியன்மார் தமிழ் வரம்பழிப்பராகலின் என்க. தொல்காப்பியம், கல்லாடம் எனவரும் வழக்கு நோக்கி இவ்வாறெழுதப் புக்கனர் போலும்! பேச முனைந்தனர் போலும்!! இவ்வழக்காற்றை ஆய்தற்கிஃதிட னன்று. திருவள்ளுவம் எனல் பிழையே. "திருவள்ளுவர்" என் பதே நல்லியற் புலமைக்குக் காட்டாம் என்றுணர்ந்து கொள்க. மேலே காட்டிப் போந்த இலக்கணக்கொத்தும் திருவள்ளுவர் என்றே கூறலையுன்னுக. இக்கட்டுரைக் கண் போதரும் வேறு பாடல்களும் அவ்வணமே கூறலையுங் கருதுக.

உ. திருவள்ளுவர் வரலாறு.

திருக்குறளாம் அமுதம் வழங்கிய ஆசிரியர் பற்றி வழங் குஞ் செய்திகள் பலவாம். அவைதம்மை யுரைக்கப்புகின் ஏடுங் காலமும் போதா. அவற்றைத் துணையாக்கொண்டு ஆய்விற் புகுதல் அவத்துய்க்கும். பெரும்பான்மையுஞ் செவிவழிச் செய்தி களாய அவை கற்பனையிற்கிளைத்தனவேயாம். வள்ளுவர் வர லாறு இஃதே யெனத் துணிதற்கோர் சான்றுமின்று.

திருவள்ளுவரின் தாய் ஆதியென்பாளெனலும் தந்தை பகவன் என்பானெனலும், முதற்குறளில் "ஆதிபகவன் முதற் றேயுலகு" எனவரூஉம் தொடர்கொண்டு கற்பிக்கப்பட்ட ஒவ் வாக் கூற்றுக்களே. திரு. மறைமலையடிகளார் இச்செய்தியை ஒப் புக் கோடல் விந்தையே. இவ்வரலாற்றை முதன் முதலுரைக் கப்புக்கது கபிலரகவல் என்னுஞ் சிறு நூலேயாம். இந்நூல் தான் எஞ்ஞான்றும் பயிற்சியிலில்லாததெனவும், விசாகப் பெரு மாளையர், சரவணப் பெருமாளையர் என்னும் வீரசைவர்களால் முன்னர்ச்சிலவடிகளும் பின்னர்ச்சிலவடிகளுமாக வரைந்து

திருக்குறட் பதிப்புக்களிலே சேர்க்கப்பட்டதெனவும், செய்யுணடையே அஃது சங்க நூலன்று; பிற்றை நாள் வித்துவான்மார் வாக்கே யென்பதைத் தெளிவிக்குஞ் சான்றுமெனவும், சில்லாண்டுகட்கு முன்னர்ப் புலவர்களால் அறுதியிடப்பட்டது. வீரசைவர் பிறப்பில் உயர்வு தாழ்வு கருதாராகலின் ஆதியைக் கீழ்க் குலத்தாளாயும் பகவனை மேற்குலத்தானாயும் கற்பித்தனர் என்ப. ஆயின் இச்செயல் வேறு பொருள்தரற்கும் அதனால் உயர்குலத்தாரென்பார் தமக்கு ஏற்றங் கூறிக் கோடற்கும் இடந் தருவதேயாம்.

இனி, வள்ளுவர் தம் வாழ்க்கைத் துணைவியாவார் வாசுகி யம்மையார் எனவும், அத்தையலார் தங்கற்பின் மாட்சியால் அற்புதம் சில நிகழ்த்தினர் எனவும் கட்டுரைப்பர். வாசுகியார் வான்புக்க ஞான்று.

"அடிசிற் கினியாளே யன்புடை யாளேப்
படிசொற் பழிநாணு வாளே — யடிவருடிப்
பின் தூங்கி முன்னெழும் பேதையை யான்பிரிந்தால்
என் தூங்கு மென்க ணெனக்கு"

என வள்ளுவர் வருந்தினரென்பர். இத்தகு செய்திகளான் நன்மையினுந் தீமையே பெரிதும் விளையும் என்னை? நூற்றைக்கெடுத்தது குறுணி என்பது போல, இச்செய்திகளுள் யாதானுமொன்று பொய்யெனல் ஆய்வில் வெளிப்பட்டு நிலையுறு ஞான்று ஏனைய உண்மைச் செய்திகளும் அங்ஙனமே பொய் யெனக் கழிக்கப்படற் கேதுவாமாகலின் என்க

இனி, கல்வெட்டிற் காணலுறும் பழஞ்செய்தி யொன்றையும் ஈண்டுக் காண்பாம். இச்செய்தி பல்லோரறியாதது; அறிந்துள பேரும் நினைவிற் கொள்ளாதது எனல் மிகையன்று.

அ) மலர்தலை யுலகந் துன்னிய மேலோன் வள்ளலெண், குணனறவாழி
குலகுரு மரபோன் கொற்றவ னென்னுங் குடமது ராபுரிக் கச்சன்
தவமதி லுதித்த தண்டமிழ் மறையோய் சருவமு முணர்ந்தபா வலனே
தலமெலா முதற்சீ ராகுல வியார சங்கமெய்ந் நாயனே யருளே

ஆ) செந்நாப் புலவர் சீர்பெயர் பெற்றுத் தெண்ணிறை
திருக்குற ளருளி
நன்னு வலர்க்கு நாவுர மீந்து நானிலத் தோர் நல
முற்றுர்
புன்னு வடியேன் போற்றவு மறியேன் புனிதமெய்ஞ்
ஞானமா வமுதே
தின்ன — னூர், மேய திருவளு ரானுய் சின்மய
நாயனே யருளே"

தமிழ் நாட்டிலே வடமதுரை யென்னு மூரிலே வைகிய கச்சன் எனப் பெயரிய சிற்றரசனொருவன்றன் திருமகனுரே திருவள்ளுவர் எனத் தெரிக்கும் இப்பாடல்கள் கல்வெட்டிற் காணப்படுவனவாம். இச்செய்தி தவத்திரு பாம்பன் குமரகுருதாச அடிகளார் அருளிய மூன்றுஞ் செவியறிவுறாஉவின் கண் பெறலாகும்.

இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்ப் புலவர்கள் என்ற நூலிலே இப்பாம்பனடிகளார் பற்றி எழுதப்பட்ட செய்திகளில் உண்மைக்குப் புறம்பாயவை பல. இந் நூல் வரிசை எழுதியவர் ஒரு பெரும் புலவர். உண்மை வரலாற்றைப் பெறுதற்குச் சிறிதும் முயலாது செவிவழிச் செய்திகள் துணை பற்றியும், ஊகித்துணர்வன்மைபற்றியுமே இவ்வாறு எழுதப்பட்டுள தென்றே கோடல்வேண்டும். நல்வினைப் பயனுல் இவ்வடிகளார் வரலாறு, அவரே மொழிந்தருள, சைவப்பாதிரியார். திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளையவர்கள் வரைந்து, வரைந்த ஏடுகளை அடிகட்குக் காட்டி ஒப்புதல் பெற்று, வெளியிடப் பெற்றுள்ளது. அதனைக் கண்ணுறுமவர் இருபதாம் நூற்றுண்டுத் தமிழ்ப் புலவர்கள் என்னும் நூலின் கண்ணுள்ள போலிச் செய்திகளை யுணர்வர் என்க.

இன்னணம் இருபதாம் நூற்றுண்டுப் புலவர்கள் பற்றியே திரிபுடைச் செய்திகள் பல கற்பித் தெழுதப்படுகின்றனவெனில் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னவர் எனக் கருதப்படும் திருவள்ளுவர் பற்றியாம் யாதுங் கூறல் வேண்டா. ஆகலின் அப்பெற்றித்தாய செய்திகளிலாழ்ந்து அவம் போகாது அவர் தம் வாய்மொழியினை ஓதியுணர்ந்தொழுகியுய்வோமாக.

ங. ஆசிரியர் பெயர்கள் :—

திருக்குறளை வழங்கிய திருவள்ளுவர் பெருமானுக்கு ஒன்பதின் மிக்க பெயர்களைச் சூட்டி மகிழ்ந்தனர் பண்டைத் தமிழாசிரியன்மார். அவற்றைக் காண்போம்.

அ) திருவள்ளுவர் :— திருவள்ளுவர் என்ற பெயருக்குக் காரணம் பலவாறு கற்பித்துரைக்கப்படுகின்றது. குடிபற்றி வந்த பெயரென்பார் சிலர். அவர் தாம்,

"அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை — மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை யவன் வாய்ச்சொல்
கொள்ளா ரறிவுடை யார்."

எனத் திருவள்ளுவ மாலைப் பாடற் கண் வரும் "வள்ளுவ னென்பானோர்பேதை" என்னுந் தொடர் அவரது வள்ளுவக் குடியின் தாழ்வு கண்டு எள்ளுவார் பேதையர் எனப் பொருடரு மென்று கருதுபவரேயாம். ஆயின் இக்கருத்துக்கரண் செய்யும் ஆதாரமேதுமின்று. திருவள்ளுவ மாலையிலுள்ள எல்லாப் பாடல்களையும் ஊன்றி நோக்குவார்க்கு அவ்வகைப் பொருள் கொள்ளல் தக்கதன்றென்னுந் துணிபே தோன்றும் என்னை? அம்மாலையில் ஏனைப் பாக்களெல்லாம் "வள்ளுவர்" என்றே பன்மையிலுயர்த்தி வழுத்துவவாக, ஐந்தேபாக்கள் "வள்ளுவன்" என ஒருமையிற் சுட்டுவவாகலின் என்பது. ஒருமையில் சுட்டு மவற்றுள் ஒன்று நாமகள் வாக்காகவும், வேறென்று இறையனார் வாக்காயுமுள்ளன, எஞ்சியவற்றுள் நான்முகனே வள்ளுவனாய்த் தோன்றினான் என்னுங் கருத்துப் பட உக்கிரப்பெருவழுதியும் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனாரும் பாடியவை இரண்டாம். இந்நான்கினும் ஒருமையில் வருதல் ஏற்புடைத்தே. எஞ்சியதே மேலே காட்டப் பட்ட மாமூலனார் பாடல் ஆகும். "வள்ளுவர்" "வள்ளுவனார்" எனப் பன்மைச் சொற்களாற் பரவல் வேண்டுந் தெய்வத் திருவினாரை "வள்ளுவன்" எனற்க. எனின் அஃது தன் பேதைமை வெளிப்படுப்பதே "எனக் கொள்ளலே நற்பொருளாம். ஆகலானன்றே சங்க நூற்கண்ணும்" "மதுரைக்கணக்காயனார் மகனார் நக்கீரனார்" "மாமூலனார்" "விளம்பி நாகனார்" முதலிய பன்மைப் பெயர்களே பயில்வவாயின. இஃதே கருத்தென்பதைத்

"நாணிலன் நாய் நன்கு நள்ளாதான் நாய் பெரியார்ப்
பேணிலன் நாய்"

எனச் சிறுபஞ்சமூலங் கூறலானும்

"தெறுவந்தும் தம் குரவர் பேருரையா ரில்லத்
துறுமி நெடிது மிரார் பெரியாரை
என்று முறைகொண்டு கூறார்"

என ஆசாரக் கோவை கூறலானுமுணர்க.

"வள்ளுவர் என்பார் தமிழ் நாட்டுப் பழங்குடியுள் ஒரு பகுதியினர். அவர் அரசரது பட்டத்து யானையின் மேல் முர சேற்றித்தாமும் உடனிருந்து முரசறைந்து திருநாள், படை நாள், மண நாள் செய்திகளை மக்களுக்கறிவிப்பர்." ஆகலின் தொழில்பற்றி வந்த பெயரே திருவள்ளுவர் என்பது; குலம் பற்றி யன்று - என்பது நாவலர் சோமசுந்தரபாரதியார் முடிபு. அரசர்க்குரிய கருமத்தலைவர் வள்ளுவர் எனக்கொண்டு இவர் இம் முடிபு கண்டார். இஃது பெருங் கதையை ஒட்டியது. அக் கதை தமிழ்நாட்டுக் கதையே யன்று. வள்ளுவரே அன்றி மகளிரும் யானை யெருத்தத்தமர்ந்து நகருக்கு மண விழாப் பற்றி யுரைப்பரே. பாரதியார் கூற்றும் "வள்ளுவர்" என்ற சொற்றுணை பற்றியதே. நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டா ரவர்களும் இம்முடிபே கொண்டார்.

வள்ளன்மையுடைமையால் வள்ளுவர் என்னும் பெயர் ஏற் பட்டது என்றும் ஒரு காரணங் காட்டி ஆய்வாமிடர்க்கடல் தாண்டுவாரும் உளர்.

அரசர் தம் உட்படு கருமத்தலைவர் (Private Secretary) என்று முரசறைவோனினும் மேற்பதவியை வள்ளுவர்க்கீந்து மகிழ்வர் சிலர். "வள்ளுவன் சாக்கை எனும் பெயர் மன்னர்க் குட்படு கருமத்தலைவர்க்கொன்றும்" எனுந்திவாகரம் இவர் கூட்காதாரமாகும்,

திருவள்ளுவர் பாண்டிய மன்னர் தம் குடியினரென்பர் துடிசைக் கிழார்.

"அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறன்தெரிந்தேம் வீடு தெளிந்தேம் — மறனெறிந்த
வாளார் நெடுமாறன் வள்ளுவனுர் தம்வாயால்
கேளா தனவெல்லாங் கேட்டு"

எனும் பாடலை அவர் சுட்டி 'வாளார் நெடுமாறன் வள்ளுவனுர்' என ஆசிரியர் கூறப்பட்டது காண்க என்பார். ஆயின்யாம் கண்ட ஏடுகளிலெல்லாம் "வாளார் நெடுமாற! வள்ளுவனுர்" என்ற பாடமேயிருப்பத் துடிசை கிழார் "நெடுமாறன்" எனும் பாடத்தை யாண்டுப் பெற்ருரோ அறிகிலம். இஃதே உண்மைப் பாடமெனக் கொள்ளின் ஏனைய விளிகட்கு என்ன கதி? "இலங்கிலைவேன்மாற" "வளநாட" "வழுதி" முதலிய விளி களும் வருதல் காண்க. மன்னர் குலத்தவரென நிறுவப்புக்கத்

துடிசைக் கிழார் "சீந்திநீர்க்கண்டம்" எனவரு பாடலில் "மலைக்குத்து மால் யானை வள்ளுவர்" என வருதலைச் சுட்டி வழக்கிட்டிருப்பின் சிறிதேனும் இயைபுடைத்தாய் வருமே. என்னை? இத்தொடரின் நேரிய பொருள் "மலையொடு மலையும் பெருமை சான்ற யானையையுடைய வள்ளுவர்" என்பதேயாம். ஆயின் "மலையொடிகலும் பெருமைசேர் யானையையுடைய மாறனே! வள்ளுவர்......" எனப் புலவன்மார் பொருள் காண்பரேயெனில் இஃது வலிந்து வருவித்துரைப்பதேயென்க. முற்பாவையும் பிற்பாவையும் நோக்கியே இப்பொருளுரைக்கப் பட்டது. இவ்வாறு தொடர்நிலைச் செய்யுட் குரித்தேயன்றி பல்லோர் பாடிய தனிநிலைச் செய்யுட் குரித்தன்றென்க.

ஆயினும் துடிசைக்கிழார் கருத்துக்குப் பெரிதும் அரண் செய்வன யாம் மேலே காட்டிய கல்வெட்டுப் பாடல்கள் ஆகும். இத்துணை வன்மைத்தாம் சான்றினை அவர் மேற்கொள்ளா மைக்கென்னேகாரணம்? அன்றியும் "செந்நாப்போதார் புனற் கூடற்கச்சு" என்ற திருவள்ளுவ மாலையும் இக்கருத்தை வலி யுறுத்துவதே. ஆகலின் வள்ளுவர் பெருமான் மன்னர் மரபின ரெனக் கொளற்குண்டாம் தடையேதுமில்லை யென்க.

அற்றேலஃதங்ஙனமாக, வள்ளுவர் குடிப்பெயரே எனக் கொள்ளின் வரும் வடுவென்னையோவெனில் அஃது வடுவென்று யாமுமுரைப்பாமல்லேம். ஆயின் அவரது இயற்பெயர் தாம் யாதோவெனக் கடாவெழுமால், காலக்கரப்பில் அவர்தம் இயற் பெயருங் கரந்த தெனக் கொள்ளாமோவெனில் கொள்ளாம். என்னை? திருவள்ளுவ மாலைக் கண்கவரும் ஐம்பத்தைந்து பாக்களும் தனித்தனிப் புலவன்மாராலுரைக்கப்பட்டனவாகும். வள்ளுவர் சிறப்புப் பெயராயுள்ள செந்நாப்போதார், மாதா நுபங்கி முதலியவற்றாலவரை அப்புலவன்மார் சுட்டினரேயன்றி இயற்பெயர் கூறிற்றிலரால், அப்பாக்களும் ஆயிரமாண்டுகட்கு முன்னரே நிலவியனவேயலாது பிற்றை நாளில் எழுந்தன வல்ல. இதனை நாவலர் நாட்டாரு மெடுத்துரைத்தார்.

> "வள்ளுவன் றனக்கு வளர்கவிப் புலவர்முன்
> முதற்கவி பாடிய முக்கட் பெருமான்"

எனக் கல்லாடருந் தங்காலத்தேயே திருவள்ளுவமாலை பயிற்சி யுண்மையை யுரைத்தல் காண்க. இக்கல்லாடர் பெயரானே,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறென்னின்
அன்றென்ப வாறு சமயத்தார் — நன்றென்ன
எப்பா வலரு மியைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி"

எனத் திருவள்ளுவ மாலைக்கண் பிறங்கும் பாடலும்

"சமயக் கணக்கர் மதிவழி கூறா
துலகியற் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன்"

எனக் கல்லாடத்து வரும் பகுதியுந் ஒத்திருத்தலையுணர்க. ஆகலின் இப்புலவன்மாரும் வள்ளுவர் காலத்தவராதல் வேண்டுமெனக் கொள்ளலில் இழுக்கொன்றுமின்று. அங்ஙனமாயின் அப்புலவன்மாரும் அவரதியற்பெயரறியாராயினரோவெனக் கடாவெழுமால். அறிவரேல் அப்பெயரை எப்புலவர் எப்பாவில் கூறியுள்ளார்? கூறிற்றிலரேல் அவ்வியற்பெயர் 'வள்ளுவர்' என்ற பெயரினும் தாழ்வுடைத்தென்று கூறிற்றிலரா? இது முதலிய தடை நிகழுமாகலின் என்பது. எனவே திருவள்ளுவர் என்பது குடிப் பெயராகாது இயற்பெயரெனலே அமைவுடைத்தாம்.

சிறப்புப் பெயரேயெனக் கொள்வாமெனில் அவ்வாறு கோடலான்வரும் ஏதம் யாதுமின்று. நான்மறையுழைப் பல்லிடங்களினும் இலை — மறைகாய்போற் புலப்படாதிருந்த நலம்படுபொருள்களையெல்லாந் தொகுத்தெடுத்து உலகுக்குதவிய வள்ளற்றன்மை நோக்கி ஆசிரியர் திருவள்ளுவர் எனச் சிறப்பிக்கப்பட்டார் என்பது யாழ்ப்பாணம்வடகோவை சபாபதி நாவலரவர்கள் தரும் விளக்கம். சிறப்புப் பெயர் எனற்கு வளமும் வனப்புங் கொண்டிலகும் இவ்விளக்கம் சால்பிற்றேயாம். "வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந், தெள்ளமுதின் தீஞ்சுவையு மொவ்வாதால்" என்ற செய்யுட்பகுதியையும் ஈண்டுன்னுக.

ஆ) நாயனார்

நாயனார் என்பது தலைமை பற்றி வந்த பெயர். அத்தலைமை யருளின் மேற்றென்க. அஃதோராமக்கள் சிலர் அறுமான்மும்மை நாயன்மார்க்கிச் சிறப்புற்றதை விரிப்பான்புக்கு நாய் + அனார் எனப் பிரித்துச் சிவசன்னிதிக்கண் நாய் போற் காத்துக் கிடப்பவர் எனவுரைத்தார் இவ்வாறுரைக்க முழுமகனும் நாணுவனே யென்க.

(தொடரும்)

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.,
டிப். மானிடவியல்,
தொல்பொருளாய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தொல்பொருளாய்வின் பல்வேறு நுணுக்கங்கள்.

ஆய்வாளர்கள் மண்ணுக்கடியில் தொல்பொருள்கள் புதைந்து கிடக்கின்ற இரகசியத்தை எவ்வாறு கண்டு பிடிக்கின்றனர். அதற்கு அவர்கள் கையாளும் முறைகள் யாவை என்பனபற்றி இங்கு ஆய்வோம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் பண்டைய நாகரீகச் சின்னங்கள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன என்பதை அறிந்து, அங்கு மண்ணை அகழ்ந்து பண்டைய நாகரிகத்தின் பெருமையை வெளிக்கொணர்வதற்கு உதவியாக ஆராய்ச்சியாளர்களுக்கு இருப்பன :—

1. அவர்கள் விரிவாக நடத்தும் ஆராய்ச்சிச் சுற்றுப்பயணம்.
2. பண்டைய இலக்கியங்களில் கிடைக்கப்பெறும் குறிப்புகள்.
3. அந்தந்த ஊர்களில் வாழ்கின்ற முதுபெரு மக்கள் தரும் செய்திகள்.
4. பழங்காலத்தில் நாட்டைச் சுற்றி பார்க்கவந்த பயணிகள் எழுதிவைத்த நூல்கள் தரும் குறிப்புகள்,
5. பழங்காலத்துப் பொருள்கள் புதைந்து கிடக்கும் இடத்தில் பலத்த மழையினுல் மண் அரிக்கப்பட்டு மேற்பரப்பு தெரிவிக்கும் சில மறைமுகக் குறிப்புகள்.
6. நவீன கால அறிவியற் கருவிகளின் மூலமாகக்காணும் சில உண்மைகள்.

1. விரிவாக நடத்தப்படும் ஆராய்ச்சிச் சுற்றுப்பயணம்.

பண்டைய இலக்கியங்களில் கிடைக்கப்பெறுகின்ற சில ஊர்களின், குறிப்புகளையும், தடையங்களையும் கருத்திலே கொண்டு, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சுற்றுப் பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மாவட்டச் சுற்றுப் பயணத்தின்போது அங்குள்ள பழம் பெருமை வாய்ந்த இடங்களை அல்லது ஊர்களைக் கால்நடையாகவே பல மைல்

கள் கடந்து தொல்பொருள் ஆராய்ச்சிக்குரிய மேடு (Mound) ஏதாவது தென்படுகின்றதா என்று ஆராயவேண்டும். ஒரு ஊர் பழமை வாய்ந்ததாக இருந்தாலும், அங்கு ஒருசில இடங்களில் மட்டும்தான் தொல்பொருள் தடையங்கள் கிடைக்கப்பெறும். அந்த ஒரு சில இடங்களுக்குத்தான் மண்மேடுகள் என்று பெயர், இப்பழமை வாய்ந்த மேடுகள் ஒரு சில இடங்களில் பழுது ஏதுமின்றி ஊருக்கு ஒதுக்கப்புறமான இடத்திலோ நடுவிலோ எவ்வாறு அழியாமல் இருக்கின்றன என்பது ஆராய்ச்சிக்குரியதாகும். இம் மேடுகள் எவ்வாறு உருவாகின்றன என்பதையும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

மண்மேடுகளின் தோற்றமும், வளர்ச்சியும்.

ஆதிகாலத்தில் மக்கள் வாழ்ந்தபோது தாங்கள் பயன்படுத்திப் பின்பு வேண்டாத பொருள்களையும், பாத்திரங்களையும் ஏனைய அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்பட்ட பொருள்களையும் தூர எறிந்தனர். இங்ஙனம் ஒதுக்கப்படுகின்ற பொருள் நாளடைவில் மண்ணுடன் கலந்து ஒரு குவியலாக மாறும். பல ஆண்டுகள் சென்ற பிறகு சிறு குவியலாகவோ அல்லது திட்டாகவோ உருப்பெறும். பல நூறு ஆண்டுகள் கடந்தால் பல மண்வரிசைகளைக் கொண்ட நன்ருக இறுகிய ஒரு பெரிய மேடுபோல் காட்சியளிக்கும். இந்த மேடுகளைத்தான் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தேடிக் கண்டுபிடித்து, அங்கு அகழ்வாராய்ச்சியைத் தொடங்குவர். இந்த மேடுகளின் உயரம் தென் இந்தியாவில் 10 அடி முதல் 30 அடிவரை காணப்படுகிறது. ஆனல் வடநாட்டில் 90 அடி உயரமுள்ள மேடுகளும் காணப்படுகின்றன. மேலும் ஊர்களில் சாலை அமைத்தல், நெற்தானிய வயல்கள் வெட்டப்படுதல், போன்றவற்ருல் இந்த மேடுகள் சில இடங்களில் பலவிதமாக உருக்குலைந்து காட்சியளிக்கும். இன்னும் சில இடங்களில் மறைந்தும் போய் இருக்கக்கூடும்.

ஒவ்வொரு மேடும் பல நூற்ருண்டுகளுக்கு உட்பட்ட தொல்பொருள்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும். வெவ்வேறு விதமான பண்பாடுகள் வாழ்க்கை வழிமுறை ஆகியவைகளைப் பின்பற்றி வாழ்ந்து மக்கள் விட்டுச் சென்ற பழம் பொருள்களை தன்னகத்தே கொண்டு விளங்கும். இவ்வாறு ஆதிமனிதன் விட்டுச்சென்ற பொருள்களைக் கொண்டுள்ள மண் அடுக்குகள் அல்லது வரிசைகள் ஒன்றின் மேல் ஒன்ருகக் கீழிருந்து மேல் வாரியாகப் பெரும்பாலும் அமைந்திருக்கும். பலத்த மழையின்

காரணமாக அரிக்கப்பட்டோ அல்லது மனிதர்களால் ஆங்காங்கே அவ்வப்போது தோண்டப்படுகின்ற குழிகளிலோ அவற்றின் உள்ளே இருக்கின்ற பொருள்கள் வெளியே கொணரப்பட்டுச் சிதறிக் கிடக்கும். தோண்டிய பள்ளங்களின் சுவர்களும், அரித்த மண்ணின் பக்கங்களும், இம்மேடுகளின் உள்ளே புதைந்து கிடக்கின்ற நாகரிகச் சின்னங்களின் சில குறிப்பிட்ட கூறுகளை விளக்கவல்லன பக்கங்களிலும், மற்ற இடங்களிலும், சட்டி ஓடு, பாசி, வளையல் போன்ற தொல்பொருள்கள் சிதறிக் கிடக்கும். இவற்றை ஆதாரமாக வைத்துக்கொண்டு ஒரு மேட்டின் தோற்றம், வளர்ச்சியின் கால அளவு, அதில் அடங்கியுள்ள பல்வேறு பண்பாட்டுக்குரிய மக்களது வாழ்க்கைமுறை ஆகியவற்றை வரையறுக்க இயலும்.

2. இலக்கியங்கள் தரும் குறிப்புகள் :—

பெருமை சான்ற பழைய இலக்கியங்கள் சில நமக்கு அக்காலத்தில் பண்பாட்டுத் தளங்களாகத் திகழ்ந்த சில ஊர்கள் அல்லது பட்டினங்களைப் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கின்றன. எடுத்துக்காட்டாக தமிழகத்தில் சங்ககால இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்ற அகநானூறு புறநானூறு போன்ற நூல்களும், காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை போன்றவையும், அக்காலத்தில் நம்நாட்டில் சிறந்து விளங்கிய பல ஊர்களையும் அவை பற்றிய குறிப்புகளையும் விரிவாகக் கொடுக்கின்றன. மணிமேகலையில் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய (தஞ்சை மாவட்டம்) பல குறிப்புகள் காணப்படுகின்றன. அது சங்க காலத்தில் ஒரு பெரிய துறைமுகப்பட்டினமாகவும், புத்த மதத்தின் இருப்பிடமாகவும் விளங்கிற்று என்று தெரியவருகிறது. அண்மைக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் ஒரு புத்த விகாரம், புத்தரின் பாதங்கள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[1] இந்தக் கண்டுபிடிப்பு மணிமேகலையில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை அறுதியிட்டுக்கூற உதவியாக உள்ளது. அங்ஙனமே திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள தொன்மை வாய்ந்த உறையூர், சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளது. அது ஆதிகாலத்தில் சோழர்களின் இரண்டாம் தலைநகரமாகவும், ஒரு பெரிய வாணிப நிலைக்களனாகவும் விளங்கிற்று எனக் கூறப்படுகிறது. அங்கு நிகழ்த்தப்பட்ட புதை பொருள் ஆராய்ச்சியில் கி. மு. 200 முதல் கி. பி. 400 ஆண்டுகட்கு

---

1 புத்தரின் திருமேனியும் கிடைத்துள்ளது.

உட்பட்ட தொல்பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. உரோமர்களுக்கே உரித்தான 'ரௌலட்டெட்' (Rouletted ware) பானை ஓடுகள் இங்குக் கிடைத்துள்ளன.[2] இவை அக் காலத்தில் தமிழகத்திற்கும் உரோம நாட்டிற்கும் இடையே நடைபெற்ற வாணிபத் தொடர்பைக் குறிக்கின்றன. இலக்கியங்கள் கூறும் காஞ்சி ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு புத்தமதத்தின் இருப்பிடமாகத் திகழ்ந்தது. இந்நகரம் கிரேக்க உரோமர்களுடன் தொடர்பு கொண்டிருந்தது. அன்றியும் மிக்க தொன்மைவாய்ந்த பண்பாட்டின் பிறப்பிடமாகவும் விளங்கிற்று. சென்ற ஆண்டு (1970) காஞ்சி மாநகரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்சிகளில் ஏராளமான தொல்பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3] இத்தொல் பொருள்கள் இலக்கியங்கள் காட்டும் காஞ்சியை நம் முன்னே படம் பிடித்து காட்டுவனவாக அமைந்துள்ளன. எனவே இலக்கியங்களில் காணப்படுகின்ற குறிப்புகளைக்கொண்டு நிகழ்த்தப்படுகின்ற புதைபொருள் ஆராய்சிகள் ஓரளவு இத்துறையில் வெற்றியைக் கொடுக்கின்றன. இலக்கியங்களின் தொன்மைக்கும், அவை தரும் குறிப்புகளின் உண்மைக்கும் சான்றுகளை அளிக்கின்றன.

3. ஊரவர் தரும் சுவையான குறிப்புகள்.

ஒரு குறிப்பிட்ட பழம் பெருமை வாய்ந்த ஊருக்குச் சென்றால் அங்கு வாழும் மக்களில் சிலர் தங்கள் ஊரின் பழம் பெருமையைப் பிறருக்கு எடுத்துக் கூறுவதில் ஒரு வகை மகிழ்ச்சியைக் காணுகின்றனர். அவர்கள் தங்கள் பழங்காலச் சந்ததியார் வாயிலாகவும், முதியோர்கள் சொல்லக்கேட்டும் தெரிந்துகொண்ட அரிய செய்திகளை நமக்குத் தெரிவிக்க முன் வருவர். அவ்வூரில் பல நூற்றாண்டுகட்கு முன்பு ஆட்சிபுரிந்த மன்னன், அவன் செய்த அரும்பெரும் செயல்கள், அந்த ஊரில் தொன்று தொட்டு இருந்து மறைந்த வரலாற்றுச் சின்னங்கள், கோவில்கள், அரண்மனைகள், குளங்கள் போன்றவைகள் இருந்த இடங்களைப்பற்றியும்

---

2. சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருளாய்வுத் துறையினர் இவ்வூரில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தியுள்ளார்கள்.

3. சென்னைப் பல்கலைக் கழக தொல்பொருளாய்வுத்துறையினர் காஞ்சியில் சென்ற ஆண்டு அகழ்வாராய்ச்சி நடத்தினார்கள். இவ்வாராய்ச்சி தொடர்ந்து நடைபெறுகிறது.

ஒரு சில குறிப்புகள் நமக்குத் தெரிவிப்பார்கள். அவர்களிடம் அவை பற்றிய சுவையான பல செய்திகளை எளிதாகப் பெற முடியும். எடுத்துக்காட்டாகக் காவிரிப்பூம்பட்டினக் கடற்கரைப் பக்கமாக வாழும் சிலர் தாங்கள் கண்டெடுத்த பழங்காலத்துச் சோழர்களின் நாணயங்களை இப்பொழுதும் நமக்குக் காட்டுகிறார்கள். நாம் அவர்களை ஊக்குவித்தால் அவர்கள் அவற்றை எங்குக் கண்டெடுத்தார்கள் என்பதையும் இன்னும் பல சிறந்த குறிப்புகளையும் வழங்கலாம்.

அக்காசுகள் நமக்கே வேண்டுமென விரும்பினால் சிறு தொகையைக் கொடுத்து நாம் அவற்றைப் பெறலாம். மேலும் இவ்வூரில் அவர்கள் கண்டெடுத்த வேறு பல பழம்பொருள்கள் ஏதாவது வைத்து இருந்தால் நமக்கு காட்டத் துடிக்கிறார்கள். ஆனால் இம்மக்கள் தரும் குறிப்புகள் நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்கும் என்று நம்ப இயலாது. ஆயினும் அவர்கள் கொடுக்கும் குறிப்புகளை நமக்கு ஒரு வழிகாட்டியாக வைத்துக் கொள்ளல்வேண்டும். அவற்றில் எத்துணையளவு நம்பிக்கை வைக்கலாம் என்பது அவரவர் ஆராய்ச்சித்திறனைப் பொறுத்ததாகும்

4. அயல் நாட்டுப் பயணிகள் தந்துள்ள — குறிப்புகள்.

ஒவ்வொரு நாட்டிற்கும் எக்காலத்திலும் தொழில், கல்வி, சமயம், கலை ஆகியவற்றின் தொடர்பாகப் பயணிகள் வந்து கொண்டிருப்பர். தற்காலத்தில் இதனை நாம் நேரில் காண்கிறோம். இப்பயணிகளில் ஒரு சிலரே தாங்கள் சுற்றிப்பார்த்த நாடுகளைப் பற்றிக் குறிப்புகளை எழுதவல்லவர்களாக இருப்பர். ஆதிகாலத்தில் நம் நாட்டைச் சுற்றிப்பார்க்க வந்த பயணிகள் பலப்பலர் அவர்களில் சிலர் மன்னர்களாலும் மக்களாலும் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டனர். அவர்கள் உள்ளூர் மக்களுடன் நெருங்கிப் பழகி, பல சுவையான குறிப்புகளை அவ்வப்போது எழுதி வைத்து விட்டுப் போயிருக்கின்றனர், தாங்கள் சுற்றிய நாடுகளைப் பற்றியும், அவற்றிற்கு அக்காலத்தில் வழங்கி வந்த பெயர்களையும் அவை அமைந்திருந்த இடங்களையும், அங்கே ஓடும் நதிகள், காணும் மலைகள் ஆகியவை பற்றியும், அங்கங்கே நிலவிவந்த அரசியல் அமைப்புகளைப் பற்றியும் சமூக, பொருளாதார, சமயத் தொடர்புடைய சுவையான செய்திகளையும் எல்லாம் எழுதி வைத்துள்ளார்கள். இக்குறிப்புகள் பழங்காலத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்குப் பேருதவியாக இருப்பனவாகும். இவர் தம் குறிப்புகளில் காணப்படும் முக்கிய இடங்

களையும், ஊர்களையும் நாம் இப்போது அடையாளம் தெரிந்து கொண்டு ஆராய்ச்சி நடத்தினல் பல உண்மைகள் தெரியவரும். அக்காலத்தில் அவ்விடங்களுக்கு வழங்கி வந்த பெயர்கள், தற்காலத்தில் சற்று மருவி மாறியிருக்கலாம். அவைப்பற்றி நுணுக்கமாக ஆராய்ந்தால் அவ்வூர்களை மிக எளிதில் அடையாளங் கண்டு கொள்ளலாம். எடுத்துக்காட்டாக கி. பி. 2—3 ஆம் நூற்றுண்டில் தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்த டாலமி' என்னும் பெரியார் உறையூரை 'உறத்தூர' (Orathura) என்று குறிப்பிடடுள்ளார். உறையூரில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் இவ்வூரின் தொன்மையும், பண்பாட்டுப் பெருமையையும் விளக்குகின்றன.

5. மேற்பரப்பு கொடுக்கும் சில அரிய குறிப்புகள்.

தொல்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மண்மேடுகள் முன்னமேயே கூறியது போல மழை, புயல், விலங்குகளின் காரணமாக ஒரு சில இடங்களில் அரிக்கப்பட்டிருக்கலாம் அல்லது கரைந்து காணப்படலாம் ஆங்காங்கே சிறு குழிகள் வெட்டப்பட்டுச் சிதைந்தும் காணப்படலாம். எனவே இக் காரணங்களினல் அந்த இடத்தில் மண்ணுள் புதைந்து கிடைக்கின்ற பொருள்கள் மேலுக்குக்கொண்டு வரப்பட்டு சிதைந்து நாலு பக்கங்களிலும் பரவிக் கிடக்கும். அப்பொருள்களை ஒன்றுகச் சேர்த்து ஆராய்ந்து பார்த்தால் அந்த இடத்தின் தொன்மையும் பெருமையும் ஓரளவு விளங்கும். பழங்காலத்துப் பானை ஓடுகள், பாசிகள், மணிகள் செங்கற்கள், காசுகள் போன்ற அப்பொருள்களைப்பற்றி தொல்பொருள் வல்லுநர்கள் நன்கு அறிந்து வைத்திருபதனல் ஒவ்வொன்றின் காலம் ஏறக்குறைய எவ்வளவு நூற்றுண்டுகள் இருக்கும் என்று உடனேயே மதிப்பிட முடியும். மற்ற இடங்களில் எந்தக் காலத்திற்குட்பட்டு அவை போன்ற பொருள்கள் கிடைத்துள்ளன என்பது போன்ற செய்திகள் அவர்களுக்கு உறுதுணையாகவிருக்கும். ஆகையால் தொல்பொருள் ஆராய்ச்சி என்பது ஒரு விந்தையான தொழிலாகும் அதற்கு வேண்டப்படுவன ;— நுண்ணறிவு, சலியா உழைப்பு, கற்பனை, எதையும் ஊன்றி ஆழ்ந்து பார்க்கும் தன்மை, சிந்தனைத் திறன் முதலியனவாகும்.

6. நவீன கால அறிவியற் கருவிகள் மூலம் காணும் உண்மைகள்.

நவீன கால அறிவியற் கருவிகளைக் கொண்டும் தொல் பொருள்கள் புதைந்து கிடக்கும் மேடுகளையும் இடங்களையும் கண்டுபிடிக்க முடியும். எடுத்துக்காட்டாக, வானூர்தியிலிருந்து

தரையைப் புகைப்படமெடுத்தால் (Aerial Photography) பூமியில் உள்ள மேடு பள்ளங்கள் மிகத் தெளிவாகத் தெரியும். இம்மாதிரியாக அகழ்வாராய்ச்சி நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் ஒரு ஊரைப் புகைப்பட மெடுத்து அந்த ஊரில் எந்தெந்த இடங்களில் மேடுகள் உள்ளன என்று அறிந்து கொண்டு. பின்னர் ஆராய்ச்சியைத் தொடங்கலாம்; இது போலவே மண்ணுக்கடியில் புதைந்து கிடக்கும் சுவர்கள், அவைகளின் இடிந்த பிரிவுகள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க "புரோடான் மாகனடா மீட்டர்" (Proton Magnetometer) என்ற கருவி பேருதவியாக இருக்கின்றது. மிக அண்மைக் காலத்தில்தான் இக்கருவி இந்தியாவில் முதன் முதலாகப் பயன் படுத்திப் பார்க்கப்பட்டது. மார்ட்டின் என்ற ஒரு அறிஞர் இந்தக் கருவியை தமிழ் நாட்டில் பல விடங்களில் சோதனை செய்து காட்டினர். அவ்வாறு பார்க்கப்பட்ட இடங்கள் :—

1. காவிரிப்பூம்பட்டினம்.
2. நத்தமேடு (கடலூர்)
3. கம்பர்மேடு (தஞ்சை)
4. உறையூர் (திருச்சி)
5. மதுரை.

இந்த ஊர்களில் பழங்காலத்துக் கட்டிடங்கள், சுவர்கள் புதைந்து கிடக்கும் உண்மையை வரை படங்கள் (Graphs) மூலம் இவர் விளக்கியுள்ளார். இந்தியாவில் முதன் முதலில் இக்கருவியைக் பயன்படுத்திய பெருமை நமது தமிழகத்தையே சாரும்.

தண்ணீருக்குள் தொல்பெருளாராய்ச்சி. (Under water avchaeology)

அண்மைக் காலத்தில் வியக்கத்தக்க முறையில் கடலுக்கடியிலும் தொல்பொருள்ராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்ச்சி அறிவியல் மேம்பாடு அடைந்துள்ள அமெரிக்கா போன்ற நாடுகளில்தான் மிகவும் முன்னேற்றமடைந்து வருகின்றது. இந்த ஆராய்ச்சிக்கு அதிக பண உதவி தேவையாகவுள்ளது; நம் போன்ற ஏழை நாடுகளில் இவ்வாராய்ச்சியை மேற்கொள்வது என்பது தற்போது இயலாவிடினும், வருங்காலத்தில் முயன்று பார்க்கலாம். பண்டைக் காலத்தில் கடல் கோளினல் கடற்கரைக்கருகாமையிலுருந்த, பல ஊர்களும், துறைமுகப் பட்டினங்களும் மூழ்கடிக்கப்பட்டன என்று இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. புயல், மழை போன்ற இன்னும்

[316ம் பக்கம் பார்க்க]

திராவிடமொழிகளில் பழமொழி ஒப்புமை

பேராசிரியர் வ. பெருமாள்,
எம். ஏ., பி. டி., எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல்நிலைக் கல்லூரி,
உரிகம், கோலார் தங்கவயல்.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தமிழும் தெலுங்கும்

திராவிட மொழிகளில் தமிழுக்குப் பழமைச் சிறப்பும் செழுமைச் சிறப்பும் இருப்பது போலத் தெலுங்கு மொழிக்கு இனிமைச் சிறப்பு உண்டு தமிழுக்கும் தெலுங்குக்குமுள்ள பொதுப் பழமொழிகளை இவண் சிறிது பார்ப்போம்.

ஒருவன் தன் கையில் தனக்கு வேண்டிய பொருளை வைத்துக் கொண்டு ஊரெல்லாம் அலையும் போது அவனைப்பார்த்துக் 'கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?' என்று நாம் கேட்பதுண்டு. இப்பழமொழி தெலுங்கில் "வெந்ந பட்டுகொநி நெய்யி வெதகநேல?' என்று வழங்குகின்றது. சில வணிகர்கள் தம் பண்டத்தைக் கடனுக்கு விற்பதில்லை. 'தயவு செய்து இன்று மட்டும் கடன் சொல்லாதீர்கள்.'' இன்று ரொக்கம் - நாளை கடன்' (Terms Cash) முதலிய வாசகங்கள் எழுதப்பட்ட பலகைகளையும் அட்டைகளை நாம் இன்றும் கடையும் களில் காண்கின்றோம். இதை உணர்த்த 'கையிலே காசு வாயிலே தோசை, என்னும் தமிழ்ப் பழமொழி எழுந்தது. இப்பழமொழி தெலுங்கில் 'சேதிலே' காசு நோடிலோ தோசெ என்று அமைந்திருக்கின்றது.

தாய்க்குக் குழந்தை பாரமாகாது. 'கொடிக்குக் காய் பாரமா' என்பது தமிழ்ப் பழமொழி. தீகெகு காய பருவா? என்பது இதே பொருள்கொண்ட தெலுங்குப் பழமொழி. கொல்லன் தெருவில் உள்ள ஒவவொரு வீட்டிலும் ஊசியிருக்கும். ஊசி விற்பதற்கு ஒருவன் கொல்லன் தெருவிற்குச் செல்வது அறிவுடைமையன்று. 'கொல்லன் தெருவில ஊசி விற்றாற்போல' என்பது தமிழில் வழங்கும் பழமொழி. இப்பழமொழி தெலுங்கில் 'கம்மர வீதிநி சூதுலு அம்மி நட்லு' என்று காட்சியளிக்கின்றது.

வாழ்க்கையை அறவே வெறுத்து உயிர் விடத்துணிந்தவன் ஆழமான கடலுக்குக் கூட அஞ்சமாட்டான். ஆழ் கடல் கூட அவனுககு முழங்கால் நீராகவே தோன்றும். 'சாகத் துணிந் தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால்'. இது தமிழ்ப் பழமொழி 'சச்சேவா நிகி சமுத்ரமு மோகாலி பண்டி' என்பது தெலுங்குப் பழமொழி.

ஆபத்துக்காலத்தில் இறைவனை நினைப்பதே மனித இயல்பு. 'சாகிற காலத்தில் சங்கரா சங்கரா' என்பது தமிழ்ப் பழமொழி. 'சச்சேடப்புடு சங்கரா சங்கரா அந்நாட்ட' என்பது தெலுங்குப் பழமொழி 'சாட்சிக்காரன் காலில் விழுவதைக் காட்டிலும் சண்டைக்காரன் காலில் விழுவதே நல்லது' என்பது நாம் எல்லோரும் நன்கறிந்த தமிழ்ப் பழமொழி 'சாட்சி காள்ளு பட்டுகோவடமுகந்நா வாதி காள்ளு பட்டுகோவச்சுநு' என்பது அதே பொருள் பொதிந்த தெலுங்குப் பழமொழி.

(314ம் பக்கம் தொடர்ச்சி)

இயற்கை தோற்றுவித்த பல இடையூறுகளினாலும் பலத்த சேதமடைந்த கப்பல்கள் கடலுக்கடியில் மூழ்கடிக்கப்பட்டு அமிழ்ந்து கிடக்கின்றன. இவ்வாறு கடலுள் மூழ்கிய நகரங்களையும், கப்பல்களையும் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமாயின் அதற்குக் கடலுக்கடியில் தொல்பொருளாராய்சி நடத்தினால் இயலும். அண்மையில் 'மெடிடரேனியன்' கடலுக்கடியில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியில் ஒரு பெரிய கப்பலே வெளியே கொண்டுவரப்பட்டது. அக்கப்பலில் சுமார் 1000 ஆண்டுகட்கு முற்பட்ட இரும்பு, செப்பு ஆணிகள், பாத்திரங்கள். மதுச்சாடிகள் போன்ற அரிய பொருள்கள் கிடைத்துள்ளன. இப்பொருள்கள் அக்காலத்தில் நிலவிவந்த கடல் வாணிபத்தைப் பற்றியும், கப்பல் கட்டும் தொழிலின் திறமையைப்பற்றியும் வியக்கத்தக்க உண்மைகளை வெளியிட்டுள்ளன. இது போன்ற ஆராய்ச்சி, தமிழ்நாட்டில் மேற்கொள்ளுவோமேயானால் கடற் கோளால் ஊறு செய்யப்பட்ட காவிரிப்பூம்பட்டினம், மாமல்லபுரம் போன்ற பண்டையப் பெருமை மிக்க பட்டனங்களைப் பற்றிய பல அரிய குறிப்புகளை நாம் தெரிந்துகொள்ள முடியும் விரைவில் இவ்வாராய்ச்சியைத் தமிழகத்தில் மேற்கொள்ள வேண்டுமென்பது இன்றியமையாத ஒன்றாகும் அப்போதுதான் தமிழர் பண்பாட்டினை இன்னும் சிறப்பாக வெளிநாட்டினர்க்கு நாம் உணர்த்தமுடியும்.

[வளரும்]

மனிதனுக்கு வருவாய் சிறிது உயர்ந்தால் செலவு மிகவும் அதிகமாகும். இது நாம் கண்ட அனுபவ உண்மை. மனிதனுடைய வருவாயையும் செலவையும் தொடர்புபடுத்தி உரைக்கின்ற தமிழ்ப் பழமொழி; சாண் ஏற முழம் சறுக்குகிறது. என்பதாகும் இதை ஒத்த தெலுங்குப் பழமொழி 'சர்நெடு எக்கிதே மூரெடு திகுநு' பாம்பு சிறிதாகயிருந்தாலும கொடியது. பாம்பை முட்டையிலும் புலியைக் குட்டியிலும் கொல்லவேண்டும் என்பது பழமொழி. 'சின்னப் பாம்பானாலும் பெரிய தடியால் அடிக்கவேண்டும்' என்பது தமிழில் உள்ள பழமொழி. சிந்ந பாமுநைநா பெத்த கர்ரதோ கொட்ட வலெநு' என்பது தெலுங்குப் பழமொழி.

ஒருவன் மற்றவனுக்கு நல்லெண்ணத்துடன் நற்செயல் புரிந்தாலும் அது பயனளிக்காவிட்டால் 'செவிடன் காதில் சங்கு ஊதியது போல' என்னும் பழமொழியைப் பயன்படுத்துகின்றோம். இப்பழமொழி தெலுங்கிலும் உண்டு. இதோ அப்பழமொழி; செவிடி வாநி முந்து சங்கு ஊதிநட்லு.'

தமிழுக்கும் தெலுங்குக்கும் ஒத்த பொதுமொழிகளைச் சுருக்கமாகக் கண்டோம்.

ஒத்த கருத்துப்பழமொழிகள் (Parallel Proverbs)

தமிழுக்கும் ஏனைய திராவிட மொழிகளுக்குமுள்ள ஒரே கருத்துள்ள பழமொழிகளை இங்குக் கண்டோம். திராவிட மொழிகளுக்கிடையே காணப்படும் ஒத்த கருத்துள்ள பழமொழிகளை இவண் சுருக்கமாகக் காண்போம்.

'நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைத்தது போல, என்பது தமிழ்ப் பழமொழி. இப்பழமொழிக்கு ஒத்த கருத்துடன் மலையாளப் பழமொழி வழங்குகின்றது 'வெள்ளரித் தோட்டத்தில் குறுநரியெ காவலாக்கிய போலெ.' வெள்ளரிக்காய்த் தோட்டத்தில் குள்ளநரியைக் காவல் வைத்தது போல என்பது. இம்மலையாளப் பழமொழியின் பொருள். நாய் குரைத்தால் நத்தம் பாழாகுமா' என்பது தமிழ்ப் பழமொழி. 'நாய் குரைச்சால் ஆகாசம் இடியுமோ? (மலையாளம்). 'நாயி பொகளிதரெ தேவலோக ஆகொளெ?' (கன்னடம்) முதலியவை ஒத்தபழமொழிகள். நாய் குரைத்தால் தேவர் உலகம் அழியுமா? என்பது கன்னடப் பழமொழியின் பொருள் 'நால்வர் வாக்கு தேவர் வாக்கு' என்பது தமிழ்ப் பழமொழி. 'அத்து ஜன ஏளித ஆகெ' (கன்னடம்) பதுகுராடு மாட பாடியகுநு' (தெலுங்கு)

தமிழ்ப் பழமொழியிலுள்ள நால்வருக்குப் பதிலாகக் கன்னடம், தெலுங்கு ஆகிய இரு பழமொழிகளிலும் 'பத்துபேர்' இடம் பெற்றிருப்பது நோக்கத்தக்கது.

'பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல' என்னும் தமிழ்ப் பழமொழி அப்படியே கன்னடத்திலும் உண்டு. அதைத் தவிர ரொட்டி நழுவி நெய்யில் விழுந்தது போல' என்னும் பொருளுள்ள பழமொழியாகக் கன்னடத்தில் இருக்கின்றது. இதோ அப்பழமொழி, 'ரொட்டி சாரி துப்பதல்லி பித்த ஆகெ' இன்பமும் துன்பமும் சகடக் கால் போல் மாறி மாறி வரும் என்பது உலக உண்மை. இவ்வுண்மை 'யானைக்கு ஒரு காலம், பூனைக்கு ஒரு காலம்' என்று தமிழ்ப் பழமொழியாகக் காட்சியளிக்கின்றது. கன்னடத்தில் 'மாமியார்க்கு ஒரு காலம் மருமகளுக்கு ஒரு காலம்' என்னும் பொருள்பட 'அத்தெ கொந்து கால, சொசெ கொந்து கால' என்னும் பழமொழியாக விளங்குகின்றது. 'அறுக்கத் தெரியாதவனுக்கு ஆயிரம் அரிவாள் என்பது தமிழ்ப் பழமொழி. அறுக்கத் தெரியாதவனுக்கு ஒன்பது அரிவாள் என்னும் பொருள்படக் கன்னடத்தில் 'குய்யலாரதவனிகெ குட்லு ஒம்பத்து' என்று பழமொழியாக வழங்குகின்றது.

'உரலுக்கு ஒரு பக்கம் இடி: மத்தளத்திற்கு இரண்டு பக்கமும் இடி' என்று தமிழில் பழமொழி உண்டு. இதற்கு ஒத்த கருத்துள்ள பழமொழி மலையாளத்தில் உண்டு 'உரல் தன் சங்கடத்தை மத்தளத்திடம் சொன்னது போல' என்னும் பொருளில் 'உரலு சென்னு மத்தளத்தோடு சங்கடம் பறயுன்ன போலெ' என்று பழமொழியாக வழங்குகின்றது. 'நாய்க்கு முழுத்தேங்காய் கிடைத்தாற் போல' என்பது தமிழ்ப் பழமொழி 'குரங்குக்குத் தேங்காய் கிடைத்தது போல' என்பது இதற்கு ஒத்த தெலுங்குப் பழமொழியின் கருத்து. 'கோதிகி கொப்பரி காய தொரிகி நட்லு' என்பது தெலுங்குப் பழமொழி.

திராவிட மொழிகளில் ஒத்த கருத்துள்ள பழமொழிகள் பல உண்டு விரிவஞ்சி சிலவற்றை மட்டுமே இங்குக் கண்டோம் இப்பழமொழிகள் யாவும் திராவிட மொழிகளுக்கிடையேயுள்ள அடிப்படை மொழியில் உறவை உறுதிப்படுத்தி மெய்ப்பித்த வண்ணம் இருக்கின்றன.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நெடுநல்வாடை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

'மக்கணுதலிய அகனைந்திணையும், சுட்டி யொருவர் பெயர் கொளப் பெறாஅர்' (அகத்திணை — 54) எனும் தொல்காப்பிய விதியின்படி அகத்திணை இன்பத் துறைகளில் தலை மக்களின் இயற் பெயர் கூறி அறிவிப்பதாகாதென்பது பெறப்படும். இன்பத்தைப் பற்றிக் கூறுமிடத்து ஒருவரிடத்தே நிகழ்ந்ததென யாவர்க்கும் புலனாக வெளிப்படுத்துக் கூருது மறைத்தற்குரிய சில பொருள்களும் வருதலும் கூடும். நெடுநல்வாடையில் தலைவன் பெயர் குறித்து யாண்டும் சொல்லப்படவில்லை. இப்பாட்டிற்குரிய தலைவனுக்கு, அவனது தானை முதல்வன், வேப்ப மாலையினைச் சூட்டப்பட்டுள்ள வேலினைக் கையிலேந்தி, நள்ளென்யாமத்தே பாசறைக் கண் விழுப்புண்பட்டோரை முறை முறை காட்டுவதாக

வேம்புதலையாத்த நோன்பின் காழெஃக மொடு
முன்னேன் முறை முறை காட்ட (176 — 177)

என்ற அடிகளால் துணியப்படும். இதன் கண் பாட்டுடைத் தலைவன் பாண்டியனது அடையாள மலருடைய வேப்ப மாலையினைச் சூடியுள்ளதாகவும் கூறப்படவில்லை. முடியுடை வேந்தர் வழி நிற்கும் குறு நில மன்னரும் செழுங்குடித்தானைத் தலைவரும் அடையாளப் பூமாலையினை உரித்தாகக்கொள்ளுவதும் இயற்கை. ஒரோவழி நட்பின் சூளுறவின், காரணமாகப் பிறிதொரு முடி வேந்தற்கு பாண்டியன் தன் துணைப் படையினை போருக்குதவ அனுப்பிய வழி, பாண்டியனது துணைப் படைத் தலைவன் தன் வேலில், பாண்டியச் சேனை எனத் தோன்றுமாறு, வேம்பு மாலை சூட்டியிருப்பின், அவ்வேப்பமாலையினைக் கொண்டு போருடைத் தலைவன் எங்ஙனம் பாண்டியனெனக் கூறுதல் இயலும்? பாண்டியனுக்குரிய வேம்பினைப் பற்றி இப்பாட்டில் கூறப்படுதலான், அத்தனி சான்று கொண்டு தலைவன் பாண்டியனென உறுதி யுளங்கொண்டு கூறுமாதலில்லை யென்பது மட்டும் தெளிவு. ஆனல் ஈண்டு பாட்டுடைத் தலைவன் குறிப்பால் பாண்டியனென்பதை பாண்டியன் நெடுஞ்செழியனை மதுரைக் கணக்காயனர் மகனர் நக்கீரனர் பாடிய நெடுநல்வாடை' என பாட்டின் அடிக் குறிப்பின் தொடரால் ஊகித்துணரும்

உளவுமுளது. மற்றும் முல்லைப் பாட்டும். மதுரைக் காஞ்சியும், பாண்டியன் நெடுஞ்செழியனைத் தலைவனாகக் கொண்டிருத்தலால், அவற்றை அடுத்திருக்கின்ற நெடுநல்வாடையும் அவனையே தலைவனாக் கொண்டதென ஊகித்தறியவும் இடமுமுளது இவற்றின் வழி நக்கீரர் பாண்டியனை அகத்திணைக்குரிய தலைவனாக வைத்து குறிப்பால் குடியுணர்த்தி அவனது வீரச் சிறப்பியல்பை விளக்கி யுள்ளாரென்பது புலனாதல் காண்க.

இப்பாட்டின்கண் தலைவனைப் பிரிந்த தலைவியின் ஆற்ருமை நிலையினை. நக்கீரர் கூறு முகத்தால், தலைவியின் உறையுள், கட்டில், அரண்மனை வாயில், நகர நெடுந்தெரு, சுற்றுப்புறத்து நானில் இயல்புகள் ஆகிய இவைகளோடு முல்லைத்திணைக்குரிய கார்காலத்துப் பெரு மழை காரணமாய் வாடை வீசும் கூதிர் காலத்தூவல்களா லேற்படும் மிகு குளிரும், அக்குளிரால் வாடும் உயிர்தொகைகளின் தன்மையினையும் உயிர்ப்பு நிகழ்ச்சிகளையும் நூற்று அறுபத்து ஏழு அடிகளில் விதந்து விரித்துரைத்து, கூதிர்ப் பாசறையை 'பாசறை முல்லை' யெனக் கொண்டு அப் பாசறையினியல்பை கிளர்ச்சி பட இருபது அடிகளில் கிளந்து, ஓரடியில் சிலதியரின் பொருண்மைக்கண் வந்த வேண்டு கோடலுங் கொண்டு, இயலழகுடன் நற்றமிழ் நக்கீரர் அருமையாக உணர்வெதிர கூறிய முறைமை உளங்கொளற்பாலது. முல்லைத் திணைக்குரிய இல்லிருத்தல் எனும் உரிப்பொருளாகிய அகப்பொருட் பகுதியை தலைவிபால் வைத்து உருக்க முதிர யாத்து விளக்கிப் பின்னர் 'வஞ்சிதானே முல்லையது புறனே' என்பதற்கியைய, வஞ்சித்திணையையும் தலைவனது நிலையில் திகழுமாறு விளங்கவைக்க நக்கீரர் உடனுரைத்துள்ளமை காண்க. தலைவி தலைவனைப் பிரிந்து அரண்மனையின் கண் இருப்பது போன்று, போர் மேற்சென்ற தலைவன் தலைவியைப் பிரிந்து பாசறைக் கண்ணிருப்பதாதலால், வஞ்சியென்பது முல்லைக்குப் புறனாகும். உற்றுநோக்குழி, முல்லைத் திணைக்குரிய முதல், கரு, உரி என்ற மூன்றும் கருத்தழகுடன் குறைவற ஓதப் பட்டிருக்கும் பான்மையால் இந்நெடுநல்வாடை முல்லைத் திணைப் பாட்டெனல் முற்றிலும் பொருத்தமுடைத்து.

மாநிலத்தை வாழச் செய்யும் மழை பெய்யுங்காலம் கார்காலமாதலின், அதனை நக்கீரர்,

'வையகம் பனிப்ப வலனேர் புவளை இப்
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிந்தென'

எனவும், கார்ப்பருவம் பின்னால், வாடைவந்தணைந்து நிலைபெறும் கூதிர்ப் பருவத்தையும், 'பொங்கல் வெண்மழை அகலிருவிசும்

பிற்றுவலே கற்ப' என்றும் கூறி தலைவனைப் பிரிந்த தலைவியர் வருந்தும் கார்ப்பருவத்தினியலை இப்பாட்டினிலே சிறப்பித்தார். இறை வாழ்த்து வணக்கங்கட்கு முதற்கண் கடவுளுண்மையில் உறுதி வேண்டற் பாலதாதலால் அது விளங்க, இறைக்கும் மழைக்குமுள்ள தொடர்பை ஈண்டு வலியுறுத்தப் பட்டிருப்பது காண்க. பொதுவாக இக்கார் காலத்தே, பிரிவுற்ற தலைவன் தலைவியர் வருந்துவர்; பிரிந்த தலைவரும் தலைவியரை வந்து கூடுவர் ஆனல் நக்கீரர் காட்டும் தலைவனாகிய அரசனே போகம் வேண்டி பொதுச் சொற்பொருது ஒழுக்கத் திற்றலைச் சிறந்து கலங்கா வுள்ளத்தில் படர்ந்த தெள்ளிய அறிவும், அறிவோடியைந்த அன்பால் முறை செய்யும் ஆள் வினையுமுடையவன். அகப்பகையாகிய காதல் நீங்கும் உணர்வு உளத்தோடு, வாடைத் தண்வளி வீசும்போதும், போர்முனையில் விழுப்புண்பட்டவரின் துன்பத்தைக் காண தன்னலமற்ற அன்பில் பயிரான வீரத்தைக் கொண்டு முகனமர்ந்து பாசறைக் கண் நள்ளென்யாமத்தும் பள்ளி கொள்ளானுய்த்திரியும் ஒள்ளியன். பாண்டியன், புலம்பொடு வதியும் தன் துணையினைத் துறந்து, துறந்ததையும் மறந்து, காமத்தை வென்ற தினை குறிப்பிடப்படுவதால் இப்பாடல் ஓரோவழி வாகைத் திணையாகலாமென்றுலும், சிந்திக்கின் அது முற்றும் பொருந்துமாறில்லை. என்னெனில் வாகைத்திணை எல்லைக்கண், பெரும்பான்மையாக தலைவனது வளம் மிகத் திகழும் போர் வெற்றிப் பேறினியல்பினை மட்டும் பாகுபட மிகுதிப் படுத்திக் கிளந்தோதப்படும். ஆனல் இப்பாட்டினிலே தலைவனது இயல்போடு தலைவியின் தகுதி ஒழுக்கம், நேர்மை பீடுடைமை முதலியன முறைபட பெரிதும் கூறப்படுதல் அறியற்பாற்று. மற்றும் இருத்தற் பொருள் முல்லைக் கண்ணுரியதாயினும், தலைவன் பாசறைக் கண்ணிருத்தல்பற்றி, வாடைக்காற்றிற்றேன்றிய கூதிர்ப் பாசறையை 'பாசறை முல்லை' எனக் கொள்ளுதலில் இழுக்கில்லை. இப்பாட்டில், கொற்றவையை விறல்தரல் பொருட்டுப் பரவுதல் கூறப்படினும், அதனை 'வாகை தானே பாலையது புறனே' என்பதற்கிசைய பாலைத்திணைக்குச் சேர்த்து முற்றித்தல் சிறிதும் ஏற்றதன்று. பாட்டுடைத் தலைவன் போர்த் தொழிலுக்குரிய கவலைச் செயலையும், வெற்றியுறும் முறையும் வெற்றிப் பெற்றியும் யாண்டும் பாட்டினிலே குறிப்பாலும் காண்கிலம். மற்றும் பாலைத்திணைக்குத் தனித் தெய்வமின்மை எனும் உண்மை தொல்காப்பிய அகத்திணையியல் ஐந்தாம் சூத்திரத்தின் கண் ஐயுறவின்றி துணிந்து கொள்ளப்படும். ஈண் கொற்றம் வேண்டி எல்லாத் திணைகட்கும் கொற்றவைத் தெய்வம் பொதுவாதல் கருதற் பாலதொன்றுகும்.

புலம்பொடுவதியும் நலங்கிளரரிவைக்கு
இன்னு அரும்படர் தீர விறல்தந்து
இன்னே முடிகதில்லம்ம (166—68)

என்பதில், தலைவியின் தனிமைத் துயர் மிகுதியைத் தீர்க்க வேண்டி 'அம்ம—கேட்பாயாக!' என கொற்றவையை நோக்கி பரவுகின்ருள் செவிலி. 'அம்ம கேட்பிக்கும்' என்பது தொல் காப்பியம். பாசறைத் தொழில் (188) விறல் தந்து (167) இன்னே முடிகதில் (168) என்ற வேண்டுகோள் தன்னல மற்ற சிறப்புடைய பொருண்மைக் கண் வந்ததும். 'தில்' விழை வின் கண் வந்ததும் காண்க. இதனில் தலைவியரது வருத்த மிகுதி தீரற்கு முக்கியத்தும் கொடுக்கப்பட்டு அதன் பொருட்டுக் கொற்றவையை செவிலித்தாயர் வணங்கியது குறிக்கப்பட்டுள் ளது: சிதலியர் பரவியது போர்த் தொழில் முடிவதற்கன்று. பாசறையின்கண் நிகழும் அன்புத் தொழிலுக்கு இனிதே வெற்றிவேண்டி 'இன்னே முடிக ...... பாசறைத் தொழிலே' எனக் கூறப்பட்டது காண்க. வேற்றுப் புலத்தில் வெற்றி நோக் கோடு கூடிய அன்புத் தொழில் இனிதே முடியப் பெற்ருல், தலைவன் உள்ளம், தனிமையோடு கிடக்கும் தலைவியை அடை யுமாறு அஃதே தூண்டி. தலைவிபால் அன்பினை மிகுவிக்கு மென்பது நக்கீரரது கருத்தாகும்.

நக்கீரர் பண்போன்ற மொழியில்வல்ல நல்ல தலைமைப் புலமைச் செல்வம் வாய்ந்தவர். புலமை யென்பது மெய்ஞ்ஞான முடைமை யாகுதலை 'புரையுநரில்லாப் புலமை யோய்' (திரு முருகாற்றுப் படை) என்ற இவரது புலமைக் கிளவியா லெழுந்த தொடரின் வழி அறியப்படும். 'கீர்' என்பது 'சொல்' எனும் பொருளது. சொல்லின் பயன் விளங்க. நக்கீரரது சொல் லாடற் செயல், தீது செறுக்கும் அறிவுரைக் கண்ணதுபற்றி இவர். கீரன் என்ற காரணப் பெயரான் அழைக்கப்படுவர். உரையாசிரியர் நச்சினுர்க்கினியர் 'குல நினையல் நம்பி கொழுங் கயற்கண்வள்ளி' (கோவிந்தை - 76) என்ற சிந்தாமணிச் செய்யுளின் உரையில் 'பின்னை அவள் பெயர்', ந—சிறப்புப் பொருள் உணர்த்துவதோரிடைச் சொல்; நச்செள்ளை, நப்பா லத்தன், நக்கீரன் என்ருற்போல நம்பின்னை விகாரமுமாம்' எனக் கூறியிருத்தலின், நக்கீரன் என்பதில் ந—சிறப்புணர்த் தும் இடைச் சொல் அடுத்து நக்கீரன் என வழங்கப்பட்டா ரென ஒரு சாரார் கூறுவர். 'கீரன்' என்ற பெயரினை ஏற்ற முடன் சிறப்போடுணர்த்துவது 'நல்' எனும் சொல்லேயன்றி.

'ந' என்பது அன்று என்றும், நக்கீரனர் (நல் + கீரன்) என்பது நக்கீரர் என்ற மரூஉ வழக்குச் சொல்லாக எங்ஙனமோ, சங்கச் செய்யுட்களில் விரவி வந்துள்ளதெனக் கூறுவாருமுளர். இவற்றுள், உரிய தறி, தல் அரியது, 'நச்சிலை நங்கை' (கம்பர்) 'நத் தெய்வ தரு' (பரஞ்சோதியார்) என்றவை போன்ற வழக்காறுகள் பனுவல்களில் பயின்று வருவதும் உளப்படுதற்பாலது. நக்கீரரது நல்ல சிறப்பு அவரது சொல்லாற்றல் சொற்செறிவு சொல்வன்மை, சொல்லமைப்பு சொல்லொழுக்கம் முதலியவற்றில் செவ்வே அமைந்துள்ளது. இதனுன் நக்கீரர், தாம் ஆளும் சொற்களில் அளவற்ற நற் பொருள் தோன்றுமாறு செய்து அறிவைத் தூண்டி, உணர்ச்சியினைக் கட்டவிழ்ந்து துள்ளும்படிச் செய்து விடுகிருர். நெடுநல்வாடையிலுள்ள ஒவ்வோரடியும் சீரும் அசையும் மாத்திரையுங் கொண்டு சிறப்பாய நயப்பொருள் பயக்கும் பான்மையில் அமைந்துள்ளது.

நக்கீரரது பாட்டினைச் சிறக்கச் செய்வது நோக்கு எனும் செய்யுளுறுப்பு. 'நோக்கு' என்பது சிறந்த கருத்துப் பொருள்களைத் தாங்கி நிற்கும் ஆற்றலுடைய சொற்களை ஆய்ந்துணர்ந்து பாடலின் நுண்பொருளை உள்ளவாறு அழகமைதியுடன் காணும் இலக்கண முறையாகும், ஆசிரியர் தொல்காப்பியர்,

> 'மாத்திரை முதலா அடிநிலைகாறும்
> நோக்குதற் காரணம் நோக்கெனப்படுமே.

எனத் தெளிவித்தருளுவதிலிருந்து நோக்கின் விளக்கமும் உணரப்படும். இதனுனன்றே, சொல்லிற் கீரன்; நோக்கிற்கு நக்கீரர் என கீரரது பாடல்கள் வழி, திறங்கருதிய தொடர்கள் தகுதி பெற எழுந்தன என்பது அறிந்து கொள்க, நல்கீரன் இயற்றிய நெடுநல்வாடையினைப் படித்தின் புறுதற்கு இந்த நோக்கு இன்றியமையாதது. என்னெனில் அது அழகொளியைப் பரப்பி, அறிவினைத் தட்டி யெழுப்பி, உள்ளம் கனிவுற உணர்ச்சியினை. வாடையில் மறைந்து நிற்கும் ஓர் உயிர்ப் பொருளினிருப்பினை நோக்கி உந்தச் செய்யும். அதனை அறிவால் உணர யுணர, முதிர்ந்த அவ்வறிவே முடிவில் முத்தி தருமென்பதில் ஐயமில்லை. அதனுல் வாடை நல்லதாகிறது: அன்பினை விரட்டுதல் செய்யும் வாடைத் துன்பியல். இன்பியல் அன்பாய் மாறி மலர்கிறது.

கடவுளன்பு, காதலன்பு, கடமையன்பு, தோழமையன்பு, பற்றற்ற வினையன்பு, நன்றியறியும் அன்பு, ஆறுதலளிக்கும் அன்பு ஆகிய இவையாவும் வாடைத் துன்பத்தைத் துறத்தி, எங்கும்

நிறைந்து உயிர்களை வளர்த்து ஒன்றுமாறு உய்க்கும் அன்பாய் மாறி வயங்குவதை, நக்கீரர் நெடுநல்வாடையில் விளங்கச் செய்தது அவர் தம் சீர்த்த அறிவோடியைந்த சொல்லாற்றல் உடைமையினைக் காட்டுகிறது. மற்றும் செடி கொடிகளில் ஒளிரும் அன்பு. புருவின் செயலில் மிளிரும் அன்பு, நன்றியிற் றிளைக்கும் களிற்றின் அன்பு, விலங்கு பறவையினத்திடையே விளங்கும் அன்பு, இனவுணர்ச்சியும், ஆண் பெண் என்ற பாலுணர்ச்சியும் கடந்த அன்பு என்பது போன்ற விழுமிய அன்பு நலக் கனிவுடைய கடவுட் காட்சிகளையே இப்பாடலில் காணப்படுவதை எண்ணி யெண்ணி எக்கழுத்தம் கொள்ளற் பாலதாகும், எனவே இவ்வாடைப் பாட்டு அன்பே கடவுளென நிறை அன்பைப் பெருக்கி, உயிர்களை உயர்த்தும் கோளை நடையினை அறிவிக்கும் கடவுட் பாட்டெனக் கருத்திருத்தல் வேண்டும், துன்பத்திருள் அசலுமாறு, அன்பெனும் ஞாயிறு எழுந்ததால். நீடுநிலவும் வாடை. மக்களுக்கு இம்மை நலனைக் காட்டி, மறுமைக் கேகும் செய்மையும் நெடுவழியும் மக்களுக்கு உணர்த்தி ஆங்கே, செயலாற்றலால் விரைந்து சென்று அமரர் சிறப்பு காண நுண்ணிதின் அறிவுறுத்தி எல்லோரையும் வாழ்விக்கும் அருமைப் பண்பு எத்துணை மாட்சிமையுடைத்து! பேரிரக்க அருளானே நிலம் புரக்கும் நக்கீரரது வாடைப்பாட்டு எவ்வுயிர்க்கும் நலம் பயத்தலைக் காண்க.

நெடுநல்வாடை, கார்கால மழையால் குளிர் மிக்கதோர் நள்ளிரவில் கடமையே உயிரெனக் கொண்டு, போர்மேற் சென்று பாசறையின்கண், புண்பட்ட வீரர்களை மகிழ்விக்கும் முறையில் கண்டு தங்கியிருக்கும் தன் கணவனின் பிரிவுத் துயரால் வருந்தியிருந்த பாண்டிமாதேவியைத் தேற்றற் பொருட்டு. அவள் சிலதியர் மன்னன் பாசறைத் தொழில் விறலோடு இன்னே முடிவதாக எனக் கொற்றவையைப் பரவுதலாகப் பாடப்பட்டது. வாடையின் இயக்கத்தைக் கொண்டு கொற்றவை வழிபாட்டிற்கு காரணமாய இருவேறு காட்சிகளை தலைவி தங்கணவரது பிரிவாற்றுமையால் அரண்மனையில் நலிதலோடு உயிர்ப்பொறை தாங்கி நிற்கும் காதலுணர்வின் நிறைவுடைமைக் காட்சி; வாடைக் காற்றின் நலிவறியாது தலைவன் நள்ளிரவில் பாசறையின்கண் விழுப்புண்பட்ட வீரர்களை நலம் பாடுபயக்க வீரவுணர்வோடு துயராற்றித் திரிதரும் காட்சி — விளங்கக்காட்டி ஆங்கே அகப்புறப் பொருளின்ப ஒழுக்கங்களை ஞானமுகமாக நோக்கி யுணரும் வண்ணம் ஆசிரியர் நக்கீரர் ஆனாப் பேருணர்வோடு இயக்கி இசைத்துள்ளார். இத்தகைய

இருவகை யுணர்ச்சிகளும், நெருக்கமுற வுணர்வு தோய்ந்து நயப்படும் முற்றிய இயல்பை விளக்க எழுந்தது செவிலியரின் கொற்றவை வழிபாடலென்பது நுண்ணிதிற் அறிதற்குரியது. ஈங்கு, அகப்புற ஆற்றலை நல்லாட்சிப் படுத்த, எங்கும் பரந்து யாவற்றையும் இயங்கப் பண்ணரித் தாயெனத்திகழும் கொற்றவையின் வழிபாட்டை இப்பாட்டின்கண் இறை நலங்கனிந்து துலங்கும்படி புகுத்திக் கவிதையை நக்கீரர் மலரச் செய்து விடுகிறார்.

கொற்றவையைப் பரவிய செவிலி, தலைவியின் நிலையைக் கூறுவதாக அவள் படுக்கையின் சிறப்பும் படுக்கை விரிந்துள்ள வேலைப்பாடுடைய கட்டிலின் சிறப்பும், அக்கட்டிலின் மேல் விதானத்தில் மெழுகு செய்பட மிசைத் தீட்டிய திங்களஞ் செல்வனேடு பிரியாது நிலை பெற்றுள்ள உரோகிணியின் ஓவியக் கலைச் சிறப்பும், அக்கட்டிலிலிருக்கும் காணுதற்கினிய அந்தப் புற உறையுளின் சிறப்பும். அந்தப்புற உறையுளோடு பல உறையுளமைந்த அரண்மனை யோடு கூடிய மாநகர்ச் சிறப்புமாகிய இவைகளோடு அந்நகரைச் சூழ்ந்துள்ள நானிலத்தின் சிறப்பினையும் நக்கீரர் விளங்கத் தெளிய வைத்தார். ஊதை வீசும் கூதிர் காலத்தின் இயல்பினையும் இயைபுகருதி மலைப்புறமும் காடும் வயலும் சோலையும் நகரும் எவ்வாறிருந்தன என்பதைக் காட்டி இவையாவும் தலைவியின் பிரிவுத் துயரை எவ்வாறு மிகுதிப் படுத்தும் தன்மையாய் வாய்ந்துள்ள தென்பதை நக்கீரர் நோக்கி யுணருமாறும் தெளிவு காணுமாறும் வைத்தார். அதன் பின்பு தலைவன் மழையிரவிலும், குளிர்தரு வாடைக்காற்று வருத்தும் துன்பத்திலும் துயிலானுய்ச் செய்யும் பாசறைத் தொழிலின் இயில்பினை நுனித்துணர வைத்தார். பின்னர் நக்கீரர், இயைபும் இயைவும் கருதி. பாண்டியன், மழைத் துளிகளைத் தன் மேல் விழாது தடுக்கும் குடையொடு பாசறைக்கண், வாடைக்குச் சாய்ந்தெரியும் விளக்கொளி வீச போரினில் புண்பட்டாரைக் காண ஏகும்போது, வேம்பு தலையாத்த வேலுடைய படை முன்னேன் முன்காட்ட, பிடியை விட்டு நீங்கிய யானையும் துணையிற்றீர்ந்த பரியும், சேரும் நீரும் சேர்ந்த துளிகள் அரசன்மேல் தெறிகக, கூதிர்வளியால் விதிர்த்துப் பின் தொடர வன்கண் வீரனது சுவல் மிசை வைத்த கையனுய் விழுப்புண்பட்டார்க்கு தோழமை யன்பால் முகமன் மொழிந்து கொண்டே, பாசறையில் பலர் இயற்றும் தொழிலுக்கு முரணிய தொழிலைக் கைக்கொண்டு நள்ளிரவில் பள்ளி கொள்ளாதும் கலக்கமில்லாதும் திரிதலை உடன் மொழிந்துள்ளார். இத்தகைய

நெறி முறையால், பாட்டுடைத் தலைவன் தலைவியரது இரு வகை மனவமைப்பு உணர்வு நிலைகளுக்குமுள்ள வேறுபாட்டை எடுத்துரைத்து, ஒற்றுமை முகத்தால், அகப்புற நற்பொருளை இன் சொற்படுத்தி கலைத்திறனோடும் கற்பனையுணர்வோடும், வியக்கத்தக்க வகையில் புலப்படுத்திய நக்கீரரது நயம், உற்று நோக்குவோர்க்கு உலப்பிலாக் கவியின்பம் ஊட்டவல்ல தாய்த் திகழ்கிறது. மற்றும் நக்கீரர் தலைவன் தலைவியரை மிக நுட்ப மாகச் சிறப்புஞ் செய்துள்ள சாலப்பெரு மாற்றலையும் மதித் திறனையும் உற்றுணர்மின்! வியமின்! நயமின்! பாராட்டி மகிழ்மின்!

நற்பெரும் புலவர் நக்கீரர் நெடுநல்வாடையில் இயற்கை யழகு நவிற்சியை இனிமை சிறக்கும்படிக் கூறி, மழைத் துளி களோடு வாடை வீசுதலாலெழுந்த குளிரின் கொடுமையும், ஊதை யின் நடுக்கத்தையும் உணர்ச்சிக் கேறும்படி செய்தது அவரது புலமை நோக்கும், வாக்குத் திறனுமென்க. இங்ஙனம் வாடைக் குளிரில் இயற்கையையும உயிரினங்களையும் உணர்ச்சிப் பரிவு ததும்ப கற்பனை நலத்தோடு நக்கீரர் விதந்தோதியதினுன், வாடைக்கேற்ப, இந்நெடும் பாட்டின் நடை கட்டில்லாத குளிரிள நறுமை யுடையதாய் அமைந்துள்ளமை காண்க. வாடையினது நோவ்வலின் தத்துவத்தைக் காண முயலுமுன், முதற்கண் பாட்டினைச் சுவைத்து அதன் பயனைப் பெற வேண்டுதல் இன்றி யமையாதது. இதன்கண், பொருத்தமுண்மையால் வரும் பல திணைச் செய்திகள் ஒப்புமை நயத்தோடு, அகத்திற்கு உணர்ச்சி வகையான் இன்ப மூட்டும் நிலையில் நிரம்பியுள; அச்செய்திகள்பால் அமைந்து கிடக்கும் வாழ்வியல் உண்மை களும் அளப்பில. நிலத்திற்கும் திணைக்குமுள்ள தொடர்பைப் புலப்படுத்தி நக்கீரர், உயிர்களின் வெவ்வேறு உளஉணர்ச்சி நிலைகளை இயற்கை யழகிலும் இயல்பிலும் பொருந்த வைத்துக் காட்டியுள்ளார். இதனுன் நுவலப்படும் உணர்வு நிலைகள் உளங்கவரும் வலிமை நிலையினைப் பெற்றிருத்தலை நோக்க, பாட்டின் பயனும் இனிமையும் எளிதே வெளியாதல் இயல்பு. மற்றும் மண்ணிற்கும் விண்ணிற்கும் உயிராய் நின்றிலங்கும் இறைத் தன்மையை நக்கீரர் உணர்ந்து தமிழ் மரபிற் கேற்ப, அறிவு வகையான் இனிமையூட்டுவது இறும் பூதுடையது.

(தொடரும்)